செ. கு. எண்:012 நாள் :08.01.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 8.1.2014

நீலகிரி மாவட்டம், தூனேரி உள்வட்டம், தும்மனட்டி கிராமம், கச்சேரி என்ற இடத்தைச் சேர்ந்த திரு. எபிபிரகாஷ் என்பவரின் மனைவி திருமதி முத்துலட்சுமி 8.1.2014 அன்று குந்தசப்பை என்ற பகுதி அருகே புலியால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

புலியால் தாக்கப்பட்டு அகால மரணமடைந்த முத்துலட்சுமியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த முத்துலட்சுமியின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9